5348

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය I (I කොටස)
வரலாறு I (பகுதி I)
History I (Part I)

25 T I

27.08.2018 / 1300 - 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1978 வரை**

சுட்டெண் : ...................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாக **ஐவைந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. அந்த வினாவின் சரியான விடையைத் தெரிவுசெய்து, இங்கு குறிப்பிடப்பட்ட **அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** (1) ஹரிவங்ஸ (2) தீபவங்ஸ (3) போதிவங்ஸ (4) தூபவங்ஸ (5) தாதுவங்ஸ (.........)

**2.** (1) தாபிரபேன் (2) சிமுண்டு (3) செரண்டிப் (4) தம்பரட்ட (5) சிலான் (.........)

**3.** (1) நந்திமித்த (2) புஸ்ஸதேவ (3) தீகஜந்து (4) வேலுசுமண (5) கோதயிம்பர (.........)

**4.** (1) பெட்ரோ லொப்ஸ் டீ சூஸா
(2) ஜெரோனிமோ டீ அசாவிடோ
(3) கொன்ஸ்ரான்ரினோ டீ ஸா டீ நொரன்ஞா
(4) பிலிப் டீ ஒலிவீரா
(5) டிகோ டீ மெலோ டீ காஸ்ரோ (.........)

**5.** (1) டீ. எஸ். சேனாநாயக்க (2) ஒலிவர் குணதிலக்க
(3) டட்லி சேனாநாயக்க (4) ஜோன் கொத்தலாவல
(5) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க (.........)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**6.** (1) கதம்ப நதி - மல்வத்து ஓயா
(2) மகா நதி - தெதுரு ஓயா
(3) கோண நதி - கலா ஓயா
(4) வன நதி - வளவ கங்கை
(5) கப்பகந்தார நதி - மாணிக்க கங்கை (.........)



tamilguru.lk

More Past Papers at
tamilguru.lk

7. (1) மெகஸ்தனீஸ் - கிரேக்கன்
(2) பிறொகோப்பியஸ் - உரோமன்
(3) ஹியூன் சாங் - சீனன்
(4) மார்க்கோ போலோ - பாரசீகன்
(5) இப்ன் பட்டுட்டா - அராபியன் (.........)

8. (1) குட்டபாரிந்த - புத்ததாஸ லாபரிதேவ
(2) மகாசேனன் - மின்னேரித் தெய்வம்
(3) நிஸங்கமல்லன் - காலிங்க சக்கரவர்த்தி
(4) இரண்டாம் பராக்கிரமபாகு - கலிகால சாகித்திய சர்வஞ்ஞ பண்டித
(5) ஆறாம் பராக்கிரமபாகு - சத் பாஷா பரமேஸ்வர (.........)

9. (1) சில்வத் சமாகம - வலிவித்த சரணங்கர தேரர்
(2) சைவப்பிரகாச சபை - ஆறுமுகநாவலர்
(3) பௌத்த பிரம்மஞான சங்கம் - ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
(4) இராமகிருஷ்ண மிஷன் - நடேச ஐயர்
(5) மகாபோதி சங்கம் - அனகாரிக தர்மபால (.........)

10. (1) 1815 - முடிக்குரிய நிலங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்
(2) 1856 - கோவில் நிலங்கள் கட்டளைச் சட்டம்
(3) 1872 - தானிய வரிக் கட்டளைச் சட்டம்
(4) 1897 - தரிசு நிலக் கட்டளைச் சட்டம்
(5) 1935 - நில அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (.........)

● **11** தொடக்கம் **15** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரயாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

11.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கொடவாய கல்வெட்டு | A | கிராம நிர்வாகம் பற்றிய சட்டதிட்டங்கள் |
| (ii) | சித்துல்பவ்வ கல்வெட்டு | B | துறைமுகம் ஒன்றின் சுங்கவரிகள் தொடர்பானது |
| (iii) | கொண்டவட்டுவான் கல்வெட்டு | C | சிவனொளிபாத புனித தலத்திற்கு முதலாம் விஜயபாகுவால் அளிக்கப்பட்ட நிலத்தானம் |
| (iv) | அம்பகமுவ கல்வெட்டு | D | கீத் என்ற நுவரகல சேனாதிபதிக்கு அளிக்கப்பட்ட நிலத்தானம் |
| (v) | தெவனகல கல்வெட்டு | E | நீதிமன்றத்துக்குக் கிடைத்த தண்டப்பணம் பௌத்த சங்கத்துக்கு வழங்கப்படுதல் |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

12.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஹுத்தொட்ட அணைக்கட்டு | A | வளவ கங்கை |
| (ii) | எலகர அணைக்கட்டு | B | அம்பன் கங்கை |
| (iii) | மினிப்பே அணைக்கட்டு | C | களு கங்கை |
| (iv) | தங்கத்தி அணைக்கட்டு | D | மகாவலி கங்கை |
| (v) | கொட்டபத்த அணைக்கட்டு | E | தெதுறு ஓயா |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

13.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | விஜயபாகு பிரிவேனா | A | றைகம |
| (ii) | பத்மாவதி பிரிவேனா | B | முல்கிரிகல |
| (iii) | ஶ்ரீ கணானந்த பிரிவேனா | C | பப்பிலியான |
| (iv) | சுனித்திராதேவி பிரிவேனா | D | தொட்டகமுவ |
| (v) | இருகல்குலதிலக பிரிவேனா | E | காரகல |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

[பக். 3 ஐப் பார்க்க

**14.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளர் | A | பிரெட்றிக் நோர்த் |
| (ii) | முதல் ஒல்லாந்து தேசாதிபதி | B | ஹென்றி மொங்க் மேஸன் மூர் |
| (iii) | முதல் பிரித்தானிய தேசாதிபதி | C | வில்லியம் கோபல்லாவ |
| (iv) | முதல் மகாதேசாதிபதி | D | வில்லியம் ஜே. கொஸ்ரர் |
| (v) | இலங்கையின் முதலாவது ஜனாதிபதி | E | சேனா சம்மத விக்கிரமபாகு |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

**15.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தாழ்நில உற்பத்தியாளர் சங்கம் | A | எஸ். ஏ. விக்கிரமசிங்க |
| (ii) | சிலாபச் சங்கம் | B | விக்ரர் கொரயா |
| (iii) | இலங்கைத் தேசிய காங்கிரஸ் | C | சார்ள்ஸ் டீ சொய்சா |
| (iv) | இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி | D | பொன்னம்பலம் அருணாசலம் |
| (v) | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | E | ஜீ. ஜீ. பொன்னம்பலம் |

(1) BEACD (2) CBDAE (3) CDAEB (4) DEACB (5) EDABC (.........)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**16. பின்வருவனவற்றுள் இலங்கையின் புராதன கால, இடைக்கால தலைநகரங்களின் பெயர்களைச் சரியான கால ஒழுங்கில் காட்டும் தெரிவு யாது ?**

(1) அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகலை, தம்பதெனியா, யாப்பகூவ
(2) அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனியா, குருணாகலை, யாப்பகூவ
(3) அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகலை
(4) அனுராதபுரம், தம்பதெனியா, பொலன்னறுவை, யாப்பகூவ, குருணாகலை
(5) அனுராதபுரம், யாப்பகூவ, பொலன்னறுவை, தம்பதெனியா, குருணாகலை (.........)

**17. பின்வருவனவற்றுள் முதலாம் பராக்கிரமபாகுவின் வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் அடங்கியுள்ள தெரிவு யாது ?**

(1) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, சங்கமு விகாரை
(2) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, இராமேஸ்வரம்
(3) தெவனகல, ஆர்ப்பாக்கம், இராமேஸ்வரம், விஜயநகரம்
(4) தெவனகல, ஆர்ப்பாக்கம், சங்கமு விகாரை, இராமேஸ்வரம்
(5) தெவனகல, ஆர்ப்பாக்கம், பல்லவராயன் பேட்டை, திருவாலங்காடு (.........)

**18. பின்வருவனவற்றுள் பதினாறாம் நூற்றாண்டின் பின்னரான இலங்கை வரலாற்றை எழுதிய நூலாசிரியர்களின் பெயர்களைக் கொண்ட தெரிவு எது ?**

(1) ரிபைறோ, குவெய்ரோஸ், மற்சூக்கர், பார்ன்ஸ்
(2) ரிபைறோ, குவெய்ரோஸ், வலன்ரையன், பால்டயஸ்
(3) ரிபைறோ, குவெய்ரோஸ், வலன்ரையன், மெயிற்லண்ட்
(4) ரிபைறோ, குவெய்ரோஸ், அல்மெய்டா, பால்டயஸ்
(5) ரிபைறோ, வலன்ரைன், பால்டயஸ், ரொறிங்ரன் (.........)

**19. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேயருக்கு எதிராக சிங்களவர்கள் மேற்கொண்ட போர்களைக் கொண்ட தெரிவு எது ?**

(1) முல்லேரியா, தந்துரே, பலன, வெல்லஸ்ச
(2) தந்துரே, பலன, ரந்தெனிவல, வெல்லஸ்ச
(3) முல்லேரியா, பலன, ரந்தெனிவல, கட்டுவன
(4) பலன, ரந்தெனிவல, கன்னொறுவ, வெல்லஸ்ச
(5) முல்லேரியா, தந்துரே, பலன, ரந்தெனிவல (.........)

More Past Papers at
tamilguru.lk

[பக். 4 ஐப் பார்க்க

**20.** **பின்வருவனவற்றுள் இலங்கையில் அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடங்களின் அடிப்படையில் அவை சரியான கால ஒழுங்கில் அமைந்துள்ள தெரிவு யாது ?**

(1) இலங்கை சமசமாஜக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(2) இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(3) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன
(4) இலங்கை சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
(5) ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன (.........)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**21.** **அனுராதபுர இராசதானியின் நிர்வாகம்**

(1) முழு நிர்வாக இயந்திரத்தின் மையமாக மன்னன் விளங்கினான்.
(2) அனைத்து அனுராதபுர மன்னர்களும் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.
(3) கோட்பாட்டினடிப்படையில் நீதித்துறையின் தலைமைத் தானத்தில் மன்னன் விளங்கினான்.
(4) கோட்பாட்டளவில் மன்னனே மண்ணிற்குத் தலைவனாக விளங்கினான்.
(5) மன்னனின் வருமானத்தின் பிரதான மூலமாக நிலமே காணப்பட்டது. (.........)

**22.** **அபயகிரி விகாரை**

(1) அபயகிரி விகாரை வலகம்பா மன்னனால் கட்டுவிக்கப்பட்டது.
(2) பௌத்த சமயக் கல்வியின் புகழ்பெற்ற மையமாக அபயகிரி விகாரை விளங்கியது.
(3) அபயகிரி விகாரையில் தேரவாத, மகாயான நூல்கள் கற்கப்பட்டன.
(4) அபயகிரி விகாரையில் திரிபிடகம் எழுத்து வடிவம் பெற்றது.
(5) சீன யாத்திரிகரான பாகியன் துறவி அபயகிரி விகாரையில் தங்கியிருந்தார். (.........)

**23.** **கம்பளை இராசதானி**

(1) கம்பளையில் இருந்து ஆட்சிபுரிந்த முதல் அரசன் நான்காம் புவனேகபாகு ஆவான்.
(2) சேனாலங்காதிகார, அழகக்கோனார் ஆகிய இரண்டு பிரதான பிரபுத்துவ குடும்பங்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.
(3) கம்பளை ஆட்சிக் காலத்தில் கோகில சந்தேஸய, பரவி சந்தேஸய எனும் இலக்கியங்கள் இயற்றப்பட்டன.
(4) யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனான ஆரியச்சக்கரவர்த்தி, கம்பளை இராசதானியை ஆக்கிரமித்தமை பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன.
(5) கணேஸ்வராச்சாரியாரின் படைப்பாக கடலாதெனிய விகாரை அமைந்துள்ளது. (.........)

**24.** **சீத்தாவாக்கை இராசதானி**

(1) 1521 விஜேபாகு கொள்ளையின் (‘விஜயபா கொல்லய’) பின்னர் தோற்றம் பெற்றது.
(2) மாயாதுன்னை இதன் முதல் ஆட்சியாளன்.
(3) றைகம் பண்டாரவின் மரணத்தின் பின் றைகம் சீத்தாவாக்கை இராசதானியுடன் இணைக்கப்பட்டது.
(4) 1582 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் கண்டியப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டன.
(5) 1619 இல் சீத்தாவாக்கை இராசதானியுடன் யாழ்ப்பாண இராசதானி இணைக்கப்பட்டது. (.........)

**25.** **1815 கண்டி உடன்படிக்கை**

(1) பிரித்தானிய ஆளுநரும் கண்டிப் பிரதானிகளும் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
(2) கண்டிய சிம்மாசனத்தின் மீது நாயக்கர் வம்சத்திற்கு இருந்த உரிமை இல்லாதொழிக்கப்பட்டது.
(3) கண்டிய மாகாணங்களுக்கான ஆளுநராக ஜோர்ஜ் ரேணர் நியமிக்கப்பட்டார்.
(4) ஐந்தாம் சரத்தின் பிரகாரம் பௌத்த மதத்திற்கு பாதுகாப்பு அளிப்பது உறுதிப்படுத்தப்பட்டது.
(5) கண்டிப் பிரதானிகள் சிங்களம் அல்லது தமிழில் கையெழுத்திட்டனர். (.........)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ........................................ **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ........................................ **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ........................................ **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ........................................ **4** எனவும்

**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**26. இலங்கையில் பௌத்த சமயம் தாபிக்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?**
(A) மகிந்த தேரரின் வருகை
(B) பிக்கு-பிக்குணி சாசனமுறை தாபிக்கப்படுதல்
(C) மகாமேகவன நந்தவனத்தை வணக்கத்திற்குரிய பௌத்த சங்கத்திற்குத் தானமளித்தல்
(D) அரசி அனுலா பிக்குணியாகத் தீட்சைப்பெறுதல் (.........)

**27. யாப்பகூவ இராசதானி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) யாப்பகூவ சுப பப்பத என்னும் பெயரில் அறியப்படுகிறது.
(B) சங்க என்ற தளபதியால் யாப்பகூவவில் முதன் முறையாக நிர்வாக இருக்கை ஒன்று தாபிக்கப்பட்டது.
(C) முதலாம் புவனேகபாகுவால் எகிப்திய சுல்தானிடத்திற்கு அரச தூதுக்குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.
(D) யாப்பகூவ கட்டடக்கலைப் படைப்புக்களில் வலிமையான சோழ செல்வாக்குக் காணப்பட்டது. (.........)

**28. ஆறாம் பராக்கிரமபாகுவின் சாதனைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) ஆறாம் பராக்கிரமபாகு முழுத் தீவையும் ஒன்றுபடுத்தினான்.
(B) ஆறாம் பராக்கிரமபாகுவின் தலைநகரமாக ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை விளங்கியது.
(C) ஆறாம் பராக்கிரமபாகு சீனக் கடற்படைத் தளபதியான செங் கோவைத் தோற்கடித்தான்.
(D) தெவிநுவரவில் உபுல்வன் தேவாலயத்தை ஆறாம் பராக்கிரமபாகு கட்டுவித்தான். (.........)

**29. ஆறுமுகநாவலர் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) ஆறுமுகநாவலர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்து சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாவார்.
(B) கென்றி ஸ்டீல் ஒல்கொட்டுடன் நெருங்கிய தொடர்பினை ஆறுமுகநாவலர் கொண்டிருந்தார்.
(C) ஆறுமுகநாவலர் சைவ வித்தியாசாலையைத் தாபித்தார்.
(D) ஆறுமுகநாவலர் மது ஒழிப்பு இயக்கத்தின் தீவிர அங்கத்தவர் ஆவார். (.........)

**30. டீ. பி. ஜெயதிலக பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை ?**
(A) நாலந்தா கல்லூரியின் அதிபராக டீ. பி. ஜெயதிலக விளங்கினார்.
(B) டீ. பி. ஜெயதிலக மது ஒழிப்பு இயக்கத்தின் ஒரு தலைவராவார்.
(C) டொனமூர் அரசியலமைப்பின் அரசாங்க சபையில் முதற் தலைவராக டீ. பி. ஜெயதிலக விளங்கினார்.
(D) ஐக்கிய தேசியக் கட்சியின் உருவாக்கத்தில் டீ. பி. ஜெயதிலக ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். (.........)

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**31. கந்தளாய் குளம் யாரால் கட்டப்பட்டது ?**
(1) இரண்டாம் ஜெட்டதிஸ்ஸ மன்னன்
(2) இரண்டாம் உபதிஸ்ஸ மன்னன்
(3) இரண்டாம் மொகல்லான மன்னன்
(4) இரண்டாம் அக்கபோதி மன்னன்
(5) இரண்டாம் சேன மன்னன் (.........)

**32. அமாவதுர என்ற நூலின் ஆசிரியர் யார் ?**
(1) குருளுகோமி
(2) வித்யாசக்கரவர்த்தி
(3) பராக்கிரம பண்டிதர்
(4) சாரிபுத்த தேரர்
(5) மேதங்கர தேரர் (.........)

[பக். 6 ஐப் பார்க்க

**33.** **ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் 1762 இல் கண்டி இராச்சியத்திற்கு இராஜதந்திர தூதுவராக அனுப்பப்பட்டவர் யார் ?**

(1) றொபேர்ட் நொக்ஸ் (2) ஜோன் பைபஸ் (3) ஹியூ போய்ட்
(4) றொபேர்ட் அன்ட்றூஸ் (5) ஜோன் டொயிலி (.........)

**34.** **வித்தியாலங்கார பிரிவேனாவின் தாபகர் யார் ?**

(1) வலானே சித்தார்த்த தேரர் (2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
(3) தொடந்தூவே பியரட்ண தேரர் (4) இரத்மலான தர்மாலோக தேரர்
(5) வலிவிட்டிய சோறத தேரர் (.........)

**35.** **பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் இடம்பெற்ற இஸ்லாமிய மறுமலர்ச்சியின் முக்கிய பிரமுகர் யார் ?**

(1) எம். சி. சித்திலெப்பை (2) ஒரபி பாஷா (3) வாப்பிச்சி மரிக்கார்
(4) ரி. பி. ஜயா (5) பதியுதீன் முகமத் (.........)

● **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பனவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றை நன்கு விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | அனுராதபுரத்தில் விஜயன் தனது தலைநகரை அமைத்தான். | மகாசேனன் அழகாபுரியில் ஆளகமண்ட குபேரனைப் போல வாழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. | (.........) |
| **37.** | காலிங்க மாகனின் படையெடுப்பு அனுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழியமைத்தது. | அலகராக் கால்வாய், மின்னேரி வாவி ஆகியவற்றைப் புனரமைத்தது போன்ற பல நீர்ப்பாசனத் திட்டங்களை முதலாம் விஜயபாகு மேற்கொண்டான். | (.........) |
| **38.** | இலங்கை வரலாற்றில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ராஜரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சி ஒரு பிரதான திருப்புமுனையாக அமைந்தது. | பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் தம்பதெனியாவிலிருந்து தென்மேற்கிற்கு நிர்வாக மையம் இடம் மாறியதுடன் நீரியல் நாகரிகத்தின் வீழ்ச்சியும் ஆரம்பமாகியது. | (.........) |
| **39.** | தேசவழமை என்ற பெயரில் தமிழர்களின் வழக்காறுகளையும் சட்டங்களையும் ஒல்லாந்தர் தொகுத்தனர். | கண்டி இராச்சியத்தின் மீதான ஒல்லாந்தர் படையெடுப்பு 1765 இல் ஜான் ஸ்ரூடரால் மேற்கொள்ளப்பட்டது. | (.........) |
| **40.** | திருமதி. பண்டாரநாயக்காவின் முதலாவது அரசாங்கத்தில் அரச உதவி நன்கொடை பெற்ற பல பாடசாலைகள் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. | 1964 இல் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. | (.........) |

**

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය I (II කොටස)
வரலாறு I (பகுதி II)
History I (Part II)

25 T I

## இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப் படத்திலே கீழே தரப்பட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) வளவை கங்கை (ii) ஊராத்தோட்டை (iii) களனிய (iv) நாச்சதூவ வாவி
(v) குருணாகல் (vi) கொட்டியாரம் (vii) பதுளை (viii) வட மாகாணம்

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** "மகாவம்சம் மகாவிகாரையின் புராணமாகும்."

(i) மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட உரையினைப் (டீகா) பெயரிடுக. (01 புள்ளி)

(ii) மகாவிகாரைக்கு உரித்தான பிரதான உபோசதகர, பிரதான தூபி ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) மகாவம்சத்தில் உள்ளடங்கியுள்ள மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரையுள்ள அரசியல் வரலாறு தொடர்பான தகவல்கள், கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுமாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) மகாசேனனது ஆட்சியின் இறுதிக் காலம் வரை மகாவிகாரையின் புராணமாக மகாவம்சத்தைக் கருதுவது எந்தளவு ஏற்புடையதாகும் ? (07 புள்ளிகள்)

**3.** இலங்கையை ஐக்கியப்படுத்துவதற்காக துட்டகைமுனு மன்னன் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு காவந்தீசன் மன்னன் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

**4.** "முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம், புராதன நீர்ப்பாசன முறைமை வரலாற்றில் அதி உச்சக் கட்டத்தைக் குறித்து நின்றது." ஆராய்க. (14 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் தம்பதெனிய காலத்தின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க.

(i) தம்பதெனிய இராசதானியின் உருவாக்கம்

(ii) அந்நிய படையெடுப்பாளர்களைத் தோல்வியடையச் செய்தல்

(iii) கலாசார விழிப்புணர்வு (14 புள்ளிகள்)

**6.** இலங்கையின் கரையோர மாகாணங்களில் போர்த்துக்கேயரின் அதிகாரம் வீழ்ச்சியுறுவதற்கு ஏதுவான காரணிகளை விமர்சனரீதியாக ஆராய்க. (14 புள்ளிகள்)

(பக். 8 ஐப் பார்க்க

7. "பிரித்தானியர் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத்துறையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது."

(i) இலங்கையில் முதற் தடவையாகக் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்த பிரித்தானியப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளரைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயிரிடப்பட்ட பிரதான **இரண்டு** பணப் பயிர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உதவிய கோல்புறூக் ஆணைக்குழுவின் சீர்திருத்த முன்மொழிவுகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விரிவாக்கம் இலங்கையின் பொருளாதாரத் துறையில் ஓர் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியமை பற்றிப் பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

8. **பகுதி (A)** அல்லது **பகுதி (B)** இற்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** டொனமூர் அரசியலமைப்பின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**(B)** 1978 குடியரசு அரசியலமைப்புத் திட்டம் 1972 குடியரசு அரசியலமைப்புத் திட்டத்திலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது என்பதனைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(i) சீகிரியா

(ii) நிஸ்ஸங்கமல்ல மன்னன்

(iii) ஆரியச்சக்கரவர்த்தி வம்சம்

(iv) 1818 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்

(v) விவசாயக் குடியேற்றத் திட்டங்கள்

(vi) 1956 பொதுத்தேர்தல் (ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள் வீதம்)

* * *

More Past Papers at
tamilguru.lk

AL/2018/25/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය I
வரலாறு I
History I
25 T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ..............................

